# ஞானஸ்நானத்தில் நடைபெறும் மாற்றங்கள்

*முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோமர் 6:17, 18).*

நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது, ஞானஸ்நானத்துடன் இணைந்துள்ள ஆவிக்குரிய உண்மை நிலைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இருதயத்திலிருந்து ஆவிக்குரிய ஈடுபாடு கொண்டிருந்தால், நான்கு முக்கியமான மாற்றங்கள் நடைபெறும்.

## நிலைமையில் ஒரு மாற்றம்

ஞானஸ்நானத்திற்குள் வருவதில் நமது பாவத்தை மன்னிக்கத் தமது மரணத்தில் தம் இரத்தத்தைச் சிந்திய மேசியா என்ற வகையில், இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசமுள்ளவர்களாய் நாம் வர வேண்டும். அவரை நமது கர்த்தராக ஏற்றுக் கொள்வதற்காக நமது கடந்த கால வாழ்வை விட்டு நீங்கும்படி நமது இருதயத்தில் நாம் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். இதை நாம் செய்யும் பொழுது, அவர் நமது நிலைமையைப் பின்வருமாறு மாற்றுவார்: (1) இழந்துபோன நிலையிலிருந்து இரட்சிக்கப்பட்டுள்ள நிலைக்கு (மாற். 16:16; 1 பேது. 3:21), (2) பாவத்தினால் சுமை சுமத்தப்பட்டிருந்த நிலையிலிருந்து, நமது பாவங்களிலிருந்து சுத்தமாகக் கழுவப்பட்ட நிலைக்கு (அப். 22:16), மற்றும் (3) நமது பாவத்தினால் குற்ற உணர்வுள்ள நிலையிலிருந்து நமது பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலைக்கு (அப். 2:38; கொலோ. 2:12, 13). இவைகள் வித்தியாசமான மூன்று நிலைகளல்ல, ஆனால் ஒரு மாற்றத்திற்கான மறைமுக சுட்டிக் காட்டுதல்களே ஆகும். கிறிஸ்தவரல்லாத ஒருவர் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் தமது பாவங்கள் கழுவப்பட்டு, கிறிஸ்தவராகும் பொழுது இந்த மாற்றம் நடைபெறுகின்றது.

# இடத்தில் ஒரு மாற்றம்

நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது, ஆவிக்குரிய வகையில் நாம் சரியான ஈடுபாடு கொண்டிருந்தால், இனியும் நாம் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்க மாட்டோம், அங்கு நாம் அவரை விட்டுப் பிரிந்த நிலையில் இருந்தோம். எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "... கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமா யிருந்தீர்கள் ..." (எபே. 2:12).

கிறிஸ்தவர்களாவதில் நமது இருப்பிடம் மாறுகின்றது - ஏனெனில் நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்றோம், அது இயேசுவின் இரத்தத்தினால் தேவனுக்கு அருகில் கொண்டு வரப்படுகின்ற இடமாகும் (எபே. 2:11-13). இயேசுவுக்குப் புறம்பேயிருத்தல் என்பதிலிருந்து அவருக்குள் இருத்தல் என்பதற்கு நமது இடத்தை மாற்றுவதினால் (ரோமர் 6:3; கலா. 3:27), நாம் இயேசுவின் இரத்தத்தினால் சாத்தியமாக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களுக் குள் பிரவேசிக்கின்றோம். அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (எபே. 1:7; கொலோ. 1:14). கிறிஸ்துவுக்குள் நாம் புது சிருஷ்டிகளாக்கப்படுகின்றோம் (2 கொரி. 5:17), கிருபையைப் பெறும் வழி கிடைக்கின்றது (எபே. 1:6; 2 தீமோ. 2:1), நாம் இரட்சிப்பைப் பெறுகின்றோம் (2 தீமோ. 2:10), நித்திய ஜீவனை நாம் மகிழ்வுடன் அனுபவிக்கின்றோம் (1 யோவா. 5:11), மற்றும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் நமக்குக் கிடைக்கப் பெறுகின்றன (எபே. 1:3).

இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதினால் நாம் இயேசுவில் உள்ள ஒரே சரீரமாகிய (ரோமர் 12:5), கிறிஸ்துவின் சரீரமாகிய (1 கொரி. 12:27), சபைக்குள் (எபே. 1:22, 23; 5:30; கொலோ. 1:18, 24; 3:15) பிரவேசிக் கின்றோம். நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது (1 கொரி. 12:13) பிரவேசிக்கின்ற சபை என்ற ஒரே சரீரத்திற்கு (எபே. 5:23) இரட்சகராக உள்ளவர் இயேசுவே.

சபையில் உள்ளவர்களின் பெயர்கள் பரலோகத்தில் ''எழுதப் படுகின்றன'' (எபி. 12:23). இது, நமது பெயர்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதால் (வெளி. 21:27) நாம் பரலோகத்தில் பிரவேசிப்போம் என்று அர்த்தப்படுகின்றது. அந்த ஜீவ புத்தகத்திலிருந்து (வெளி. 3:5) நமது பெயர் அழிக்கப்பட்டுவிடாதபடிக்கு நாம் வெற்றி கொள்ளும் வாழ்வை வாழ வேண்டும். நமது பெயர்கள் அந்த ஜீவ புத்தகத்தில் இல்லையென்றால், நாம் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவோம் (வெளி. 20:15). சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால்" (எபே. 5:26) இயேசுவின் இரத்தத்தின் மூலம் பூரணராக்கப் பட்டுள்ளோம் (எபி. 12:23), குற்றமற்றவர்களாகவும், கறையற்றவர் களாகவும் ஆக்கப்பட்டுள்ளோம். ஆகையால் நாம், கரைதிறையற்றவர் களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்கப்படுவோம் (எபே. 5:27; கொலோ. 1:19-23).

*சபை என்பது இயேசுவின் இராஜ்யமாக உள்ளது (மத். 16:18, 19); அது அசைவில்லாத இராஜ்யம் (எபி. 12:28). இராஜ்யத்தின் உறுப்பினர்களும், இராஜ்யத்தின் புத்திரர்களும் இயேசு மற்றும் பிதா ஆகியோரின் நித்திய இராஜ்யத்தில் சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள் (மத். 13:37-43; 2 பேது. 1:10, 11). அந்த இராஜ்யத்திற்குள் நாம் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறப்பதன் மூலம் பிரவேசிக்கின்றோம் (யோவா. 3:3-5).*

*சபையின் உறுப்பினர்கள் தேவனுடைய வீடாகிய அவரது குடும்பத்தில் பிள்ளைகளாய் உள்ளனர் (1 தீமோ. 3:15). நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களாக ஆகின்றோம் (கலா. 3:26, 27). பிள்ளைகள் என்ற வகையில் நாம் தேவனுடைய வாரிசுகளாகின்றோம் மற்றும் இயேசுவுக்கு உடன் வாரிசுகளாகின்றோம் (ரோமர் 8:17; கலா. 4:7). வாரிசுகள் என்ற வகையில் நமது சுதந்தரமானது பரலோகத்தில் இருத்தல் என்ற அழிவில்லாத இடமாக உள்ளது (1 பேது. 1:3, 4).*

*நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் தொடங்கும்! இவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களாய் இருக்கின்றனர் - ஏனெனில் இவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களிலிருந்து பேதுருவால் வேறு படுத்திக் காண்பிக்கப்படுகின்றனர் (1 பேது. 4:17). சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவபெலனாக உள்ளது (ரோமர் 1:16), இது தேவனுடைய வீட்டிலிருப்பவர்கள், சபையார், இரட்சிக்கப்பட்டுள்ளனர் என்று அர்த்தப்படுகின்றது. நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவில்லையென்றால், "... கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை" அடைவோம் (2 தெச. 1:10).*

*சபையானது "மந்தை" என்றும் அழைக்கப்படுகின்றது (அப். 20:28). இயேசு தமது மந்தையில் உள்ள ஆடுகளுக்காகத் தமது ஜீவனைக் கையளித்தார் (யோவா. 10:11, 15). நாம் அவருடைய ஆடுகள் என்ற வகையில் அவருக்குக் கீழ்ப்படிகின்றோம் (யோவா. 10:27; எபே. 5:24). நாம் அவரைப் பின்பற்றுகிறதினால் நமக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும் (யோவா. 10:27, 28). இயல்பான உலகில், ஆடுகள் ஒரு மந்தைக்குள் பிறக்கின்றன; அது போலவே, ஆவிக்குரிய வட்டாரத்தில், நம்மை இயேசுவின் மந்தையில் உறுப்பினர்களாக்குவதற்கு ஆவிக்குரிய பிறப்பு (யோவா. 3:3-5) அவசியமாய் இருக்கின்றது.*

*நாம் எங்கு இருக்கின்றோம் என்பது பெரியதொரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது. நாம் கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய அவருடைய சபைக்குள் - இயேசுவின் இராஜ்யத்தினுள், தேவனுடைய குடும்பத்தினுள் மற்றும் இயேசுவினுடைய மந்தைக்குள் - இல்லையென்றால் நாம் பரலோகத்தினுள் பிரவேசிக்க முடியாது. நமது ஞானஸ்நானமே நம்மைக் கிறிஸ்துவின் சபைக்குள் வைக்கக் கூடிய இடமாற்றத்தைச் சாத்தியமாக்குகின்றது.*

## ஊழியத்துவத்தில் ஒரு மாற்றம்

*பாவத்திற்கு ஊழியம் செய்கின்ற வாழ்வை விட்டு, நீதிக்கு ஊழியம் செய்கின்ற புதிய வாழ்வில் பிரவேசித்தலே ஞானஸ்நானத்தில் நமது ஆவிக்குரிய ஈடுபாட்டின் விளைவாக உள்ளது (ரோமர் 6:16-18). பாவம் நம்மை அடிமைப்படுத்துகின்றது, மற்றும் அது நம்மைப் பாவத்தின் ஊழியக்காரர்களாய் ஆக்குகின்றது (யோவா. 8:34; ரோமர் 6:16; 2 பேது. 2:19). நமக்கு ஒப்புவிக்கப்பட்ட போதனைக்கு இருதயத்திலிருந்து கீழ்ப்படிதலினால் நாம் மாற்றப்படாத வரைக்கும் (ரோமர் 6:17, 18) நாம் பாவத்திற்கு ஊழியம் செய்வதிலேயே நிலைத்திருக்கின்றோம். ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவுடன் (ஆவிக்குரிய முறையில்) மரிக்கின்ற பொழுதுதான் மாற்றம் நிகழ்கின்றது (ரோமர் 6:3, 4). அந்த வேளையில், பழைய வாழ்வு சிலுவையில் அறையப்படுகின்றது, பாவ உடலானது ஒழிந்து போகின்றது, அதன் பின்பு நாம் இனியும் பாவத்திற்கு ஊழியம் செய்வதில்லை (ரோமர் 6:4-6). ஞானஸ்நானத்தில் நாம் பாவத்திற்கு மரிப்பதன் மூலமாக, பாவத்தின் ஆளுகை செய்யும் வல்லமையில் இருந்து நாம் விடுவிக்கப்பட்டுள்ளோம் (ரோமர் 6:7, 18).*

## உறவுமுறைகளில் ஒரு மாற்றம்

*நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது, நமது உறவுமுறைகள் மாறுகின்றன. நாம் ஞானஸ்நானம் பெற்று இயேசுவின் இராஜ்யத்திற்கு உட்படுத்தப்படுவதற்கு முன்பு நாம் சாத்தானுடைய ஆளுகையின் கீழ், இருளின் அதிகாரத்தில் இருக்கின்றோம் (அப். 26:18; கொலோ. 1:13). அவ்வகையில் நாம் அதை உணராமல் இருக்கலாம் மற்றும் அதை ஒப்புக் கொள்ள நாம் விரும்பாதிருக்கலாம் - ஆனால் அதுவே உண்மையான விஷயமாய் உள்ளது. நாம் பிசாசானவன் விரும்புகின்றவைகளைச் செய்கின்ற வரையிலும் (யோவா. 8:44) நாம் பிசாசின் பிள்ளைகளாகவே இருக்கின்றோம் (1 யோவா. 3:7, 8, 10). நமது விசுவாசமானது நம்மைத் துன்மார்க்கமானவனுடைய பிள்ளைகளாய் இருப்பதிலிருந்து தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கும்படி மாற வழிநடத்துகின்றது (கலா. 3:26, 27).*

*இராஜ்யத்தின் புத்திரர்கள் என்ற வகையில் நாம் இன்னமும் இவ்வுலகில் உள்ள பொல்லாங்கனின் பிள்ளைகளின் மத்தியிலேயே வாழ்கின்றோம் (மத். 13:37-39). அறுவடையை அறுக்கத் தூதர்கள் அனுப்பப்படும் பொழுது, இராஜ்யத்தின் புத்திரர்கள் சாத்தானுடைய புத்திரர்களில் இருந்து பிரிக்கப்படுவார்கள். துன்மார்க்கர் பிதாவினுடைய இராஜ்யத்திற்குள் நுழைவதற்குப் பதிலாக அக்கினியில் தள்ளப்படுவார்கள் (மத். 13:39-43).*

*நாம் பாவத்தின் இருளில் இருந்தால், நாம் தேவனுடன் ஐக்கியமாய் இருக்க முடியாது - ஏனெனில் தேவன் ஒளியாய் இருக்கிறார், அவருக்குள் இருள் இல்லை (1 யோவா. 1:5-7). பாவமானது நம்மைத் தேவனிடமிருந்து பிரிக்கின்றது மற்றும் நாம் அவருடன் ஐக்கியம் கொள்ளாதபடிக்குத் தடை*

செய்கின்றது (ஏசா. 59:1, 2). இயேசுவுக்குப் புறம்பே உள்ளவர்கள் அவரிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர்; அவர்கள் தேவனும் கிறிஸ்துவும் இல்லாதிருக்கின்றனர் (எபே. 2:11, 12). நாம் ஞானஸ்நானத்தினால் இயேசுவுக்குள் பிரவேசிக்கும் பொழுது (ரோமர் 6:3; கலா. 3:27), இருளுடன் நமக்குள்ள தொடர்பு முடிகின்றது, மற்றும் நாம் ஒளியுடன் நமது தொடர்பைத் தொடங்குகின்றோம். இயேசுவில் நாம் அவரது இரத்தத்தின் மூலமாக தேவனுக்கு அருகில் கொண்டு வரப்படுகின்றோம் (எபே. 2:13).

## தொகுப்புரை

ஞானஸ்நானம் பெறுதல் மற்றும் தேவன் எதிர்பார்க்கின்ற ஆவிக்குரிய மாற்றங்கள் ஆகியவற்றின் பயன்களை நாம் புரிந்து கொள்ளும் பொழுது நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும். இந்த மாற்றங்கள் இன்றி, நாம் தேவனுடைய இராஜ்யத்தினுள் நுழைய அனுமதிக்கின்ற புதுப்பிறப்பை நாம் பெற்றுக் கொள்ள முடியாது (யோவா. 3:3-5).

## *ஞானஸ்நானம் தேவனிடத்திலிருந்து வந்ததா அல்லது மனிதரிடத்திலிருந்து வந்ததா?*

"ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்" (யோவா. 1:33) என்று யோவான் தேவனை அடையாளப்படுத்தினார். "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று?" (மத். 21:25) என்று கேட்டதன் மூலம் யோவானின் ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிற்று என்று இயேசு மறைமுகமாய் உணர்த்தினார்.

லூக்காவும் கூட, ஞானஸ்நானத்தைத் தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகவே முன்னிறுத்தினார்: "பரிசேயரும் நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளி விட்டார்கள்" (லூக். 7:30).

ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த பரிசேயர்கள் யோவானிடம், "நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர்? என்று கேட்டார்கள்" (யோவா. 1:25). தேவனுடைய மாபெரும் மக்களுடன் அடையாளப்படுத்த வருகின்ற செயல்முறை என்பதாக அவர்கள் ஞானஸ்நானத்தைச் சரியாகத் தொடர்புபடுத்தினர்.